**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.**

## மார்ச்/ஏப்ரல் 2018 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு தனித்தேர்வர்கள் தேர்வுக்கூட அனுமதிச்சீட்டுகளை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்தல் தொடர்பான

## செய்திக்குறிப்பு

நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2018 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுத ஆன்–லைன் மூலம் விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் (தட்கல் உட்பட) 15.02.2018 பிற்பகல் முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தின் மூலம் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### பதிவிறக்கம் செய்யும் முறை

**www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று முதலில் “HALL TICKET DOWNLOAD” என்ற வாசகத்தினை “Click” செய்தால் தோன்றும் பக்கத்தில் உள்ள “SSLC EXAM MARCH/APRIL 2018 – PRIVATE CANDIDATE – HALL TICKET PRINTOUT” என்ற வாசகத்தினை “Click” செய்து தோன்றும் பக்கத்தில் தங்களது விண்ணப்ப எண் (Application Number) மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்தால், அவர்களுடைய தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு திரையில் தோன்றும். அதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

அறிவியல் பாட செய்முறைத் தேர்வுக்கான தேதி குறித்த விவரத்தை தனித்தேர்வர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளரை அணுகி அறிந்து கொள்ள வேண்டும். உரிய தேர்வுக்கூட அனுமதிச் சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மார்ச்/ஏப்ரல் 2018 பொதுத் தேர்விற்கான கால அட்டவணையை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்கு சென்று அறிந்து கொள்ளலாம்.

**ஓம்/–**
**இயக்குநர்**

**இடம் :** சென்னை – 6
**நாள் :** 07.02.2018.

## SSLC EXAM MARCH/APRIL 2018 HALL TICKET INSTRUCTIONS

**தேர்வர்களுக்கான முக்கிய அறிவுரைகள்**

- தேர்வர்கள் தேர்வெழுத வரும்பொழுது அனுமதிச் சீட்டினை அறைக் கண்காணிப்பாளரிடம் காண்பித்தால் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.
- தேர்வர்கள் அலைபேசிகளையோ அல்லது இதர தொலைத் தொடர்பு சாதனங்களையோ தேர்வு வளாகத்தினுள்/தேர்வு அறையினுள் கட்டாயமாக கொண்டு வரக்கூடாது.
- அறிவியல் செய்முறைத் தேர்வுகள் . **20.02.2018, முதல் 28.02.2018** வரை மேற்படி தேர்வு மையத்திலேயே நடைபெற உள்ளது. இத்தேர்வை எழுதும் தேர்வர்கள் தவறாமல் மேற்படி நாட்களில் தேர்வு மைய தலைமையாசிரியரை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.
- தேர்வர்கள் விடைத்தாளில் எக்காரணம் கொண்டும் ஸ்கெட்ச் பேனாவையோ அல்லது வண்ண பென்சில்களையோ பயன்படுத்தி எழுதுதலோ அல்லது அடிக்கோடிடுதலோ கூடாது.
- தேர்வர்கள் விடைத்தாள் புத்தகத்தில் உள்ள பக்கங்களை எக்காரணம் கொண்டும் கிழிக்கவோ அல்லது தனியாக பிரித்து எடுத்துச் செல்வதோ கூடாது.
- தேர்வர்கள் துண்டுத்தாள் வைத்திருத்தல், பிற தேர்வர்களை பார்த்து எழுதுதல், துண்டுத்தாளை பார்த்து எழுதுதல், விடைத்தாளை பரிமாறி கொள்ளுதல், ஆள்மாறாட்டம் செய்தல் மற்றும் தமது *விடை*த்தாளில் தாம் தேர்வெழுதிய அனைத்து விடைகளையும் தாமே கோடிட்டு அடித்தல் போன்ற நிகழ்வுகள் ஒழுங்கீனச் செயல்களாக கருதப்பட்டு அதற்குரிய தண்டனைகள் வழங்கப்படும் என எச்சரிக்கப்படுகிறார்கள். எனவே தேர்வர்கள் அவ்வாறான தவறான செயல்களில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- பார்வை மாற்றுத் திறனாளி உட்பட அனைத்து மாற்றுத் திறனாளி தேர்வர்கட்கும் அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள் 10.02.2010 அரசாணை (நிலை) எண் 23, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள் 11.02.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.54, பள்ளிக் கல்வி ஜிஇ (1) துறை, நாள் 29.02.2016 –ன்படி பொது தேர்வெழுத சலுகைகள் வழங்கப்படுகிறது.

**ஒம்/–**
**இணை இயக்குநர் (பணியாளர்)**
**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6.**

## Important Instructions to Candidates

- The candidate will be permitted to appear for the examination only on the submission of the Hall Ticket to the hall supervisor.
- Candidates are strictly instructed not to bring mobile phones or any other communicative devices inside the Examination Centre/Hall.
- Science Practical examinations will be held on **20.02.2018 to 28.02.2018** at the above mentioned exam centres. Candidates are instructed to contact the concerned Centre Headmaster on these days without fail.
- Candidates should not tear off or remove any pages from the answer booklet.
- Candidates should not use sketch or colour pencils for writing/underlining etc in answer booklet.
- Candidates should avoid involving themselves in Malpractices like Possession of bit papers, Copying from other candidates, Copying from bit papers, Substitution of Answer books, Impersonation, Fully striking all the answers written in the answer script by themselves, which may lead to punishments. Therefore,the candidates are strictly warned not to involve in those activities.
- All differently abled candidates including visually challenged candidates will be given concessions as per G.O. (Ms) No.28, School Edn (V1) Dept dt 10.02.2010, & G.O. (Ms) No.23, School Edn (V1) Dept dt 11.02.2013 and G.O. (Ms) No.54, School Edn GE(1) Dept dt 29.02.2016

sd/-
**Joint Director (P)**
**D.G.E. CHENNAI-6**